# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 19.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-1896/A/2019**

திரு ப.ரமேஷ் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல்
காவல் கண்காணிப்பாளர்,(தலைமையிடம்) -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட காவல் அலுவலகம், தஞ்சாவூர்.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 28.12.2018 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், தனது மனைவி கே.புனிதவதி காவல்துறை கண்காணிப்பாளரிடமும், வட்டக் கண்காணிப்பாளரிடமும் கொடுத்த புகாரின் நகல், அதன் மேல் மேற்கொண்ட விசாரணை, வாக்குமூலம், விசாரித்த அதிகாரியின் பெயர், பதவி போன்றவற்றை 3 இனங்களில் தகவல்களாகக் கோரியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர், பிரிவு 19(1)-ன்கீழ் 10.01.2019-ல் தமது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 11.02.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன் பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 04.03.2019-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 01.10..2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 15/10/2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, அவர் ஆணையத்திற்கு 21.10.2020-க்குள் கடிதம் மூலம் தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை ந.க.எண்.15/கூ.கா.க.(த)/த.அ.உ.ச./தஞ்சை/2020 நாள் 19.10.2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 19.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண். SA-1896/A/2019**</u>

<u>பெறுநர்</u>
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(தலைமையிடம்),
மாவட்ட காவல் அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

<u>மனுதாரர்</u>
திரு ப.ரமேஷ்,
த/பெ. பத்துரு நாராயணன்,
3/40, கீழத்தெரு,
சோழன்மாளிகை & அஞ்சல்,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம் - 612 703.
PR/PS 23/11/2020

காவல்துறை

| அனுப்புதல் | பெறுதல் |
|---|---|
| V ஜெயச்சந்திரன், | மாண்பமை மாநில தகவல் ஆணையர் அவர்கள் |
| பொதுத் தகவல் அலுவலர் மற்றும் | தமிழ்நாடு தகவல் ஆணையம், |
| கூடுதல் காவல் கண்காணிப்பாளர், | எண் 2 தியாகராய சாலை, |
| தலைமையிடம், | தேனாம்பேட்டை, |
| தஞ்சாவூர் | சென்னை-18 |

---

ந.க.எண்.15/கூ.கா.க(த)/த.அ.உ.ச/தஞ்சை/2020, நாள்.19.10.2020

அய்யா,

பொருள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் - திரு. பா.ரமேஷ், த/பெ.கே.பத்துருநாராயணன், 3/402, கீழத்தெரு, சோழன் மாளிகை & அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் 612 703 என்பவரது மனு தமிழ்நாடு தகவல் ஆணையம் -ஆணை - பதில் அறிக்கை சமர்ப்பித்தல்- தொடர்பாக.

பார்வை 1. தமிழ்நாடு தகவல் ஆணையம், எண்.2, தியாகராஜசாலை, தேனாம்பேட்டை, சென்னை வழக்கு எண். எஸ்.ஏ. 1896/ஏ/2019, நாள். 01.10.2020.

2. இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட தேதி.16.10.2020

@@@

பார்வையில் கண்ட மாண்பமை தமிழ்நாடு தகவல் ஆணைய உத்தரவில் இரண்டாம் மேல்முறையீட்டாளர் திரு. பா.ரமேஷ், த/பெ.கே.பத்துரு நாராயணன், 3/402, கீழத்தெரு, சோழன் மாளிகை & அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் 612 703 என்பவரது தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவிற்கு அளித்த தகவல் தொடர்பாக, மாண்பமை தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் இருந்து ஆணை எண்.SA 1896/A/2019, நாள். 01.10.2020-ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டு, பொது தகவல் அலுவலர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தஞ்சாவூர் அலுவலகத்தில் 16.10.2020-ந்தேதி தபால் மூலம் ஆணை பெறப்பட்டது. அதில் கோரியுள்ள தகவல்களை முழுமையாக 15.10.2020-க்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் அவ்வாறு மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்படும் பதிலறிக்கையின் நகலினை மின் அஞ்சல் மூலமாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரரின் இரண்டாம் மேல் முறையூட்டு மனு தொடர்பாக பதிலறிக்கை பெறும் பொருட்டு ந.க.எண்.15/கூ.கா.க(த)/த.அ.உ.ச/தஞ்சை/2020, நாள் 16.10.2020-ன்படி காவல் துணை கண்காணிப்பாளர், கும்பகோணம் உட்கோட்டம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது அதற்குரிய பதிலறிக்கை 19.10.2020-ந்தேதி பெறப்பட்டது. அந்த பதிலறிக்கையினை ந.க.எண்.15/கூ.கா.க(த)/த.அ.உ.ச/தஞ்சை/2020, நாள். 16.10.2020. ன்படி மனுதாரருக்கு 19.10.2020 ந்தேதி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டது. அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது

மேலும், மனுாரரின் 31.12.2018-ந்தேதி நாளிட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி பெறப்பட்ட மனுவிற்குரிய பதிலறிக்கை 02.01.2019 அன்று காவல் துணை கண்காணிப்பாளர், கும்பகோணம் உட்கோட்டம் அவர்களிடமிருந்து பெறப்பட்டு ந.க.எண்.832/கூ.கா.க(த)/த.அ.உ.ச/தஞ்சை/2019, நாள். 03.01.2019 ன்படி மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் 04.01.2019 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த பதிலறிக்கையை மனுதாரர் 07.01.2019 அன்று பெற்றுக் கொண்டுள்ளார் அதன் நகலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் மேற்கண்டுள்ள பதிலறிக்கையை பெற்றுக் கொண்டு 12.01.2019 அன்று தகவல் அறியும் உரிமைச்சட்டம் 19(1)-ன்படி தனது முதல் மேல்முறையீட்டு மனுவை பதிவு தபால் மூலம் உயர்திரு மேல்முறையீட்டு அலுவலர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், தஞ்சாவூர் என்று முகவரியிட்டு அனுப்பிய கடிதம் தஞ்சாவூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் 18.01.2019 அன்று பெறப்பட்டு அதில் குறிப்புரை செய்யப்பட்டு 23.01.2019 அன்று மனுதாரர் கோரியிருந்த தகவல்கள் தொடர்பான பதிலறிக்கை பெற கும்பகோணம் உட்கோட்டம் துணை காவல் கண்காணிப்பாளருக்கு ந.க.எண். ஜி5/1989/2019, நாள். 23.01.2019-ன்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதற்குறிய பதிலறிக்கை மற்றும் ஆவணங்கள் 02 பக்கங்கள் கும்பகோணம் உட்கோட்டம் துணை காவல் கண்காணிப்பாளரிடமிருந்து 11.02.2019 அன்று பெறப்பட்டு ந.க.எண். ஜி5/1989/2019, நாள். 23.01.2019-ன்படி மனுதாரருக்கு தபால் மூலம் 13.02.2019 அன்று பதிலறிக்கையை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் மனுதாரர் 04.03.2019 அன்று தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார் என்ற விவரம் தங்களின் மேலான பார்வைக்கு பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது)

இணைப்பு: பக்கம் 1 முதல் வரை

19/10/2020

பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
தஞ்சாவூர்.

(17) RT · 974183711-218 50225/AD3PH9

# தகவல் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழ் விண்ணப்பம்

(தகவல் உரிமைச் சட்டத்தின்படி ரூபாய் 10/-க்கான வில்லை ஒட்டப்பட்டு உள்ளது. உரிய தகவல்களை சான்றிட்டு உரிய காலத்தில் வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது)

**(பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)**

| | |
|---|---|
| அனுப்புதல்<br>**ப. ரமேஷ்,**<br>த/பெ. பத்துரு நாராயணன்,<br>3/40.கீழத்தெரு,<br>சோழன் மாளிகை அஞ்சல்,<br>கும்பகோணம் வட்டம்,<br>தஞ்சாவூர் மாவட்டம்-612 703. | பெறுநர் C.NO: 832/RTI/AD<br>உயர்திரு. பொதுத் தகவல் அலுவலர் மற்றும்<br>மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள்,<br>மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம்,<br>தஞ்சாவூர்,<br>தஞ்சாவூர் மாவட்டம். |

31 DEC 2018

ஐயா,

| | |
|---|---|
| பொருள் : | **Petition U/Sec.6(1) of the Right Information Act 2005.** |

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தாலுக்கா, சோழன்மாளிகையில் வசிக்கிறேன். எனக்கும் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், பட்டீஸ்வரம் ராமசாமி கோவில் தெருவசில் வசிக்கும் திரு.கே. கிருஷ்ணமூர்த்தியின் இளையமகளும், எனது மனைவியுமான புனிதவதி என்பவரை நான் கடந்த 29-05-2017 ல் திருமணம் நடைபெற்ற பின் நான் இல்லாதபோது எனது அனுமதியில்லாமல் எனது மனைவி புனிதவதி, அவர் தாயார் வீட்டிற்குச் சென்றவர், மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பிறகு என் மீது கும்பகோணம் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் எம்.சி.நெ. 34/2018 வழக்கு தாக்கல் செய்து உள்ளார். மேலும் கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்றத்திலும் எச்.எம்.ஓ.பி.நெ. 100/2018 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார். அனைத்து வழக்குகளும் வரும் 11-01-2019 அன்று விசாரணைக்கு உள்ளது. கும்பகோணம் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் உள்ள வழக்கிற்கு நான் எதிர்உரை தாக்கல் செய்துள்ளேன். அதன் நகலை இத்துடன் இணைத்துள்ளேன். நான் சட்டத்தையும் மதிப்பவன். அதனால் நான் நீதிமன்ற உத்தரவின்படி நடந்துகொள்ளவும் தயாராக உள்ளேன். கே. புனிதவதி என் மீதும் எனது குடும்பத்தினர் மீதும் தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் செய்துள்ளதாகவும், அந்தப் புகாரை கும்பகோணம் வட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் விசாரணைக்கு வந்திருப்பதாகவும், விசாரணைக்கு வரும்படி காவல் துறையினர் கைப்பேசி

ப.ரமேஷ்

எண்.9843134566 லிருந்து தகவல் தெரிவித்துள்ளனர். ஆதலால் என் மீது கே. புனிதவதி கொடுத்த புகாரின் நகல் சான்றிட்டு தேவைப்படுகிறது. இதற்குரிய கட்டணம் ரூ.10/- க்கான நீதிமன்ற வில்லை கட்டியிருக்கின்றேன்.

**தேவையான தகவல்களின் விபரம் :**

1) கே. புனிதவதி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடமும், வட்ட துணைக் கண்காணப்பாளரிடமும் என் மீது கொடுத்த புகாரின் சான்றிட்ட நகல் வழங்கவும்.

2) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் கும்பகோணம் வட்ட காவல்துறை கண்காணிப்பாளர் இதுவரையில் விசாரணை செய்துள்ள விபரம் வாக்குமூலம் சான்றிட்ட நகல் வழங்கவும்.

3) மேற்கண்ட விபரங்கள் குறித்து விசாரிக்கப்பட்ட நபர்களின் பெயர் மற்றும் விசாணை செய்த அதிகாரியின் பெயர், பதவி விபரம் விசாரணை வாக்குமூலம் தகவல்கள் சான்றிட்டு நகல் வழங்கவும்.

மேலேகூறிய விபரங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி மனு கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் தகவல் தெரிவிக்கக் கட்டணம் ரூ.10/- இத்துடன் நீதிமன்ற வில்லையாக சமர்ப்பிக்கின்றேன். தேவைப்படும் கூடுதல் கட்டணத்தையும் தாங்கள் வேண்டும்போது செலுத்தத் தயாராக இருக்கின்றேன் என இதன்மூலம் உறுதி அளிக்கின்றேன்.

இதுசம்பந்தமாக ஆவணங்களை ஆணையமும் நானும் பார்வையிட தகுந்த நேரத்தையும், அதற்குரிய கட்டணத்தையும் தெரிவிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். இந்த மனுவுடன் கே. புனிதவதி என் மீது கும்பகோணம் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எம்.சி.34/2018 மனுவின் நகலும், நான் தாக்கல் செய்த எதிர்உரையின் நகலும் இணைத்துள்ளேன். பட்டீஸ்வர் காவல்நிலையத்தில் நான் கே.புனிதவதி மீது கொடுத்த புகார் நகலினையும் இணைத்துள்ளேன்.

இப்படிக்கு,

ப.ரமேஷ்

நாள்: 28-12-2018

இடம்: சோழன் மாளிகை

மிக அவசரம். தகவல் அறியும் உரிமைச் சட்டம்

ந.க.எண். 832/ கூ.கா.க (த)/த.அ.உ.ச/தஞ்சை/18

கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
தலைமையிடம் அலுவலகம்,
தஞ்சாவூர்.

நாள் - 31.12.18

குறிப்பாணை

பொருள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் - திரு ப ரமேஷ். த/பெ பத்துரு நாராயணன். எண் 3/40. கீழதெரு. சோழன்மாளிகை அஞ்சல். கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் என்பவாது மனுவிற்கான பதிலறிக்கை கோருவது - தொடர்பாக.

பார்வை மேற்கண்ட மனுதாரின் மனு நாள். 27.12.18
2. இவ்லலுவலகத்தில் பெறப்பட்ட தேதி, 31.12.18

As per section 5(5) of Right to Information Act-2005 you are the deemed Public Information Officer. Hence, you will furnish the requested details within 5 days you will be held responsible for any delay and liable to take action by the State Information Commission.

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள மனுவின் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி அனுப்பியுள்ள மனுவின் நகல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

அதில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரர் தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த மனு சம்பந்தமாகவும் கும்பகோணம் துணைக் காவல்கண்காணிப்பாளரிடம் கொடுத்த மனு குறித்தும் வரிசை எண். 01 முதல் 03 வரை கோரியுள்ள தகவல்களின் நகல்களை மனுதாரருக்கு அளிக்கும் பொருட்டு 5 தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
தலைமையிடம்,
தஞ்சாவூர்.

பெறுநர்.

1. நிர்வாக அதிகாரி ( பொது ), மாவட்ட காவல் அலுவலகம், தஞ்சாவூர்
2. திரு V.செங்கமலக்கண்ணன்,, காவல்துணைக்கண்காணிப்பாளர், கும்பகோணம் உட்கோட்டம்.

02.01.19

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| காவல் துணை கண்காணிப்பாளர், கும்பகோணம். | கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், தஞ்சாவூர். |

N.Ref 064/GNL/SDOK/2018 நாள்: 02.01.2019

அய்யா,

பொருள்– பொது தகவல் அறியும் உரிமை சட்டம்– ப.ரமேஷ் என்பவர் தனது மனைவி கொடுத்துள்ள புகார் சம்மந்தமான விபரம் கேட்டுள்ளது – பதிலறிக்கை அனுப்புதல்– தொடர்பாக.

பார்வை: ந.க.எண்.832/RTI-ADSP/18

--0--

1.திரு.ப.ரமேஷ், த/பெ. பத்துரு நாராயணன், 3/40,கீழத்தெரு, சோழன்மாளிகை என்பவர் தகவல் உரிமை சட்டத்தில் தனது மனைவி புனிதவதி என்பவர் தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காப்பாளரிடம் கடந்த 24.12.18 அன்று தனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது கொடுத்துள்ள புகார் மனு ந.க.எண்.G3/48953/18–வை மனுதார் புனிதவதி என்பவர் தனது அனுமதியின்றி தன்மனுவை யாரிடமும் கொடுக்க வேண்டாம் என எழுதிக் கொடுத்துள்ளார். அவரது கடிதம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி புனிதவதி துணை காவல் கண்காணிப்பாளரிடம் எவ்வித மனுவும் கொடுக்கவில்லை.

2. புனிதவதி காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த மேற்கண்ட மனு வரதட்சணை சம்மந்தப்பட்டதாக உள்ளதால் கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மூலம் அரசு வழக்குறைஞரிடம் உரிய சட்ட கருத்துரு பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவேண்டி விசாரணையில் உள்ளது.

3. புனிதவதியின் மனுவை விசாரணை செய்யும் அதிகாரியின் பெயர். திருமதி. எஸ்.துர்கா, காவல் ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல்நிலையம், கும்பகோணம்.

காவல் துணை கண்காணிப்பாளர்,
கும்பகோணம்.